**செய்தி வெளியீடு எண்: 398** **நாள்: 25.06.2017**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (25.6.2017) திருவள்ளூர் மாவட்டம், போரூர் சந்திப்பில் நடைபெற்ற விழாவில், கோடம்பாக்கம் – ஸ்ரீபெரும்புதூர் சாலை மற்றும் மவுண்ட் – பூவிருந்தவல்லி சாலை, போரூர் சந்திப்பில் 505 மீட்டர் நீளத்தில் 54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாகனப் போக்குவரத்திற்காக கட்டப்பட்டுள்ள பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மேம்பாலத்தை மக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், “மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியோடு, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை நினைவு கொள்ளும் விதத்திலே, பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மேம்பாலம் என்று பெயர் சூட்டப்பட்டு இன்றைய தினம் இந்த பாலத்தை பொது மக்களுடைய பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலம், பல்வேறு பிரச்சினைக்கு இடையிலே இன்றைய தினம் நிறைவு பெற்று திறப்பு விழா காண்கின்றது. இந்தப் பாலம் ஆரம்பிக்கப்பட்ட காலக்கட்டத்தில் கடந்த கால ஆட்சியாளர்கள் நிலம் கையகப்படுத்தாமலேயே இந்தப் பாலப் பணியை துவக்கி விட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011–ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் இந்த பாலம் விரைவாக செயல்படுத்த வேண்டும் என்ற அடிப்படையிலே ஆணையிட்டார்கள். அவர்களது ஆணைக்கிணங்க பாலப் பணியை துவக்கின்ற போது, பாலத்திற்கு தேவையான நிலம் இல்லாத காரணத்தினாலே இந்தப் பாலப் பணி நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்தப் பாலத்திற்கு தேவையான நிலத்தினுடைய உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்கு சென்ற காரணத்தினாலே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரிலே, நீதிமன்றத்திலே நமக்கு தீர்ப்பை பெற்று இந்த பாலப் பணியை ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலை. அடுத்தக்கட்டம், இந்தப் பாலம் அமைகின்ற சாலையின் அடிப்பகுதியிலே மாநகராட்சியின் குடிநீர் குழாய் செல்கிறது. அதை அப்புறப்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை. பலமுறை ஒப்பந்தம் கோரியும் ஒப்பந்தம் எடுக்க யாரும் முன்வராத காரணத்தால் அதற்கு மாற்று ஏற்பாடாக அந்த நீர்

குழாயை மாற்றி, அந்த குடிநீர் குழாய்க்கு எவ்வித பாதிப்பும் உண்டாகாத அளவுக்கு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, மறுஒப்பந்தம் இடப்பட்டு கிட்டத்தட்ட 54 கோடி ரூபாயிலே அந்தப் பாலப் பணிக்கு ஒப்பந்தம் கோரப்பட்டு, ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டு, பணி தொடங்கப்பட்டு, இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பணி நிறைவு பெற்று, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய திருநாமத்தின் பெயரிலே பெயர் சூட்டப்பட்டு இன்றைக்கு திறக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள், எந்தப் பாலப் பணியானாலும் சரி, சாலையை அகலப்படுத்தும் பணியாக இருந்தாலும், புறவழிச் சாலைகள் அமைக்க வேண்டும் என்று சொன்னாலும், முதலிலே நிலத்தை கையகப்படுத்துங்கள், முதல்கட்டப் பணிகளை நீங்கள் மேற்கொள்ளுங்கள். முதல்கட்டப் பணி என்கின்ற போது, அந்தப் பணி துவங்குவதற்கு முன்பு, அந்தப் பகுதியிலே குடிநீர் குழாய்கள், கழிவுநீர் அகற்றல், மின்கம்பங்கள் மாற்றி அமைத்தல், தொலைதொடர்பு சாதனங்களை மாற்றி அமைத்தல் போன்ற முதற்கட்டப் பணிகளை முடித்த பிறகு தான் பணியை துவங்க வேண்டும் என்று ஆணையிட்டார்கள். அம்மாவுடைய ஆணையை ஏற்று இன்றைக்கு அம்மாவுடைய அரசு தொடர்ந்து செயல்பட்ட காரணத்தினாலே எந்தப் பணி எடுத்தாலும், நெடுஞ்சாலைத் துறையை பொறுத்த வரைக்கும் குறிப்பிட்ட காலத்தில் முடிக்கின்ற அளவிற்கு முதற்கட்டப் பணியை முடித்த பிறகு தான் அந்தப் பணிகளை துவங்குகின்றோம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்ற மாண்புமிகு அமைச்சர் திரு.பெஞ்சமின் அவர்களுக்கும், இந்தப் பகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கும், இந்த நிகழ்ச்சியிலே பங்கு கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் அமைச்சர்களுக்கும், இந்த துறையினுடைய செயலர், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கும், முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கும், கூட்டுறவு சங்க நிர்வாகிகளுக்கும், பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும், பத்திரிக்கை நண்பர்களுக்கும், எனது நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு இந்தப் பாலத்தை திறந்து வைக்கிறேன்'' என்று உரையாற்றினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று திறந்து வைக்கப்பட்ட பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மேம்பாலமானது, 20 மீட்டர் நீளமுள்ள 12 மேல் தளங்களும் மற்றும் 35 மீட்டர் நீளமுள்ள ஒரு மேல் தளமும், மொத்தம் 505 மீட்டர் நீளமும், 17.20 மீட்டர் அகலமுள்ள நான்கு வழித்தடங்களை கொண்டதாகும்.

போரூர் சந்திப்பில் தற்போது நாளொன்றுக்கு சுமார் 1,18,015 வாகன போக்குவரத்து உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் போக்குவரத்து நெரிசல் மிகுதியான இப்பகுதியில், இந்த புதிய மேம்பாலம் திறக்கப்பட்டதன் மூலம், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வாகன நெரிசல் வெகுவாக குறைவதுடன், பயண நேர விரையமும் தவிர்க்கப்படும்.

இந்த விழாவில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பி. பெஞ்சமின், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 25.6.2017